# கலைஞர் மற்றும் பொது மக்கள் பார்வையில் குரலிசையும் கருவி இசையும்

[1]கு.சிவானுஜா, [2]ஸ்ரீ.தர்ஷனன்,
யாழ்.பல்கலைக்கழகம், இலங்கை

**ஆய்வுச்சுருக்கம்**
இவ் ஆய்வானது வாத்திய இசையையா அல்லது குரலிசையையா ரசிகர்களால் அதிகமாக ரசிக்கமுடிகின்றது என்பதையும், இசை கற்றவர்கள் இசை கற்காதவர்களின் ரசிப்புத் தன்மையையும் அறிவதை நோக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. நேரடி அவதானிப்பு முறை மற்றும் கேள்வி விபரக்கொத்து முறை ஆகியன இவ் ஆய்வில் பயன்படுத்தப் படுகின்றன. கலைஞர்கள் மற்றும் பொது மக்களிடையே அவர்களின் கர்நாடக இசை ரசனைக்கான எதிர்பார்ப்புகள் வாத்திய இசை, குரலிசை என்ற இரு பெரும் பிரிவுகளிலும் கணிப்பிடப்பட்டுள்ளன. மக்கள், பொருள் இருந்தும் புரிவதற்குக் கடினமான பாடல்களை வாத்திய இசையிலேயே ரசிக்க விரும்புகின்றனர். ஆனால் பொருளற்ற விறுவிறுப்பான சொற்கட்டுகளையோ, ஸ்வரங்களையோ குரலிசையில் கேட்க விரும்புகின்றனர்.

**பிரதான சொற்கள்**: கர்நாடக இசை, குரலிசை, வாத்திய இசை, விறுவிறுப்பான இசை, பொருள் உணர்தல்

## ஆய்வு அறிமுகம்

இசையானது சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாகக் காணப்படுகின்றது. எனினும் எல்லா நாடுகளிலும் ஒரே வகையான இசை காணப்படவில்லை. கீழைத்தேய, மேலைத்தேய நாடுகளின் இசைகளில் பல்வேறுபட்ட மாறுதல்கள் காணப்படுகின்றன. எவ் வகை இசையாகக் காணப்பட்டாலும் ஒவ்வொரு இசைக்கும் என்று தனித்துவமான பண்புகள் காணப்படுகின்றன. இந்திய இசையானது கீழைத்தேய இசை வகையைச் சார்ந்தது. இவ் இசையில் வாத்திய இசை, குரலிசை என இரு பெரும் பிரிவுகள் காணப்படுகின்றன (பக்கிரிசாமிபாரதி, 2009). இவ் இரு வகையான இசை வெளிப்பாடுகளுக்கு இடையில் மாறுபாடுகள் மக்கள் மனங்களில் நிலவுகின்றன.

## ஆய்வுப் பிரச்சினை

வாத்திய இசை, குரலிசை என்ற இரு வகையான இசைகளில், கலைஞர்கள், பொது மக்கள் என்ற இரு பிரிவினரும், வேறு பட்ட ரசிப்புத்தன்மையை வெளிப்படுத்துகின்றனர். இரு இசையரங்கில், இரு தரப்பு ரசிகர்களும் இருப்பது வழக்கமாகையால், இரு தரப்பினரையும் திருப்திப் படுத்துவதற்குரிய பொதுவான அல்லது ஒத்திசைவான தன்மைகளை இனங்காண வேண்டியுள்ளது.

## ஆய்வின் நோக்கம்

உலகிலே முக்கியத்துவம் அடைந்துவரும் இசைக்கு தனித்துவமான பண்புகள் காணப்படுகின்றன. அதிலும் வாத்திய இசைக்கும், குரலிசைக்கும் இடையில் பாரியளவான வேறுபாடுகள் காணப்படுகின்றன. இந்திய இசையிலும் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. கர்நாடக இசையானது பல கட்டங்களாக வளர்ச்சியடைந்து வரும் நிலையில் மனிதர்களது ரசனைக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. இவ் ஆய்வானது வாத்திய இசையையா அல்லது குரலிசையையா ரசிகர்களால் அதிகமாக ரசிக்கமுடிகின்றது என்பதையும், இசை கற்றவர்கள் இசை கற்காதவர்களின் ரசிப்புத் தன்மையையும் அறிவதை நோக்காகக் கொண்டு மேற்கொள்ளப்படுகிறது.

## கருதுகோள்

கலைஞர்களுக்கும், பொது மக்களுக்கும் இடையிலான கர்நாடக இசை ரசனையில் பாரிய வேறுபாடு காணப்படுகின்றது. இரு தரப்பினருடைய எதிர்பார்ப்புகளும் பல விடயங்களில் வேறு வேறாக உள்ளன.

## ஆய்வு முறையியல்

நேரடி அவதானிப்பு முறை மற்றும் கேள்வி விபரக்கொத்து முறை ஆகியன இவ் ஆய்வில் பயன்படுத்தப் படுகின்றன. கலைஞர்கள் மற்றும் பொது மக்களிடையே அவர்களின் கர்நாடக இசை ரசனைக்கான எதிர்பார்ப்புகள் வாத்திய இசை, குரலிசை என்ற இரு பெரும் பிரிவுகளிலும் கணிப்பிடப்படுகிறது.

## விவரிப்பு

இவ் ஆய்வானது கர்நாடக இசை கற்றவர்களையும் கர்நாடக இசை கற்காத இசை ரசிகர்களையும் வைத்து மேற்கொள்ளப்பட்டதாகும். இதற்காகப் பொது மக்களும் பயன்படுத்தப்பட்டனர்.
இவ் ஆய்விற்கு யாழ்.பல்கலைக்கழக, இராமநாதன் நுண்கலைக்கழக இசைத்துறை

மாணவர்கள் 50 பேரும் இசை கற்காத மக்கள் 50 பேரும் எழுந்தமானமாகத் தெரிவு செய்யப்பட்டனர்.இவ் ஆய்விற்காக கர்நாடக இசைப் பாடல்கள் 5 தெரிவு செய்யப்பட்டன. அதில் 5 பாடல்களும் 5 தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டன. ஒவ்வொரு தொகுதியிலும் வாத்திய இசையும் குரலிசையும் காணப்பட்டது. அதிலும் வாத்திய இசைக்காகவும் குரலிசைக்காகவும் ஒரே பாடல்களே ஒவ்வொரு தொகுதியிலும் பயன்படுத்தப்பட்டன.

இதில் முதலாவது தொகுதியில் ஒலிக்கவிடப்பட்ட பாடல் மத்திம காலக் கீர்த்தனை ஆகும். கீர்த்தனைகள் பொதுவாக விறுவிறுப்புடனும் பல சங்கதிகளுடனும் அமைந்தனவாக உள்ளன. இதில் “சபாபதிக்கு” என்ற கீர்த்தனை இந்தியாவின் முன்னணிக் கலைஞர்களின் ஒலிப்பதிவுகள் குரலிசையாகவும் வாத்திய இசையாகவும் ஒலிக்கவிடப்பட்டன. இதில் கர்நாடக இசையைக் கற்றவர்களில் 15% மானவர்கள் குரலிசையையும், 48% மானவர்கள் வாத்திய இசையையும், 37% மானவர்கள் இருவகையிலும் கேட்க விரும்பினர். பொதுமக்களில் 22% மானவர்கள் குரலிசையையும், 67% மானவர்கள் வாத்திய இசையையும், 11% மானவர்கள் இருவகையிலும் கேட்க விரும்பினர். ஆகவே மத்திம காலக்கீர்த்தனையை, அது அவர்கள் தாய் மொழியில் அமைந்திருந்த போதிலும் கூட, இருதரப்பினரும் வாத்திய இசையில் ரசிக்கவே அதிகம் விரும்புகின்றனர் என்பது தெளிவாகின்றது.

இரண்டாவதாக சௌக்க காலக்ருதி ஒலிக்கவிடப்பட்டது. சௌக்ககாலக்ருதி கர்நாடக இசையில் மிக உயர்ந்த பொக்கிஷமாகக் கருதப்படுகின்றன. ஆனால் இக் கிருதிகள் மிகவும் குறைந்த வேகத்தில் இரட்டைக் களையாகத் தாளம் போட்டுப் பாடப்படுகின்றன. இதில் ஜெகதீஷ்வரி என்ற கிருதி, இந்தியாவின் முன்னணிக் கலைஞர்களின் குரலிசையாகவும் வாத்திய இசையாகவும் ஒலிக்கவிடப்பட்டன. இதில் கர்நாடக இசையைக் கற்றவர்களில் 73% மானவர்கள் குரலிசையையும், 12% மானவர்கள் வாத்திய இசையையும், 15%மானவர்கள் இருவகையிலும் கேட்க விரும்பினர். இசை கற்காத மக்களில் 100% மக்களும் வாத்திய இசையை மட்டுமே கேட்க விரும்பினர். ஆகவே, குறைந்த வேகத்தில் உள்ள பாடல்களை இசை கற்றவர்கள் குரலிசையிலும், மற்றவர்கள் வாத்திய இசையிலும் ரசிக்க விரும்புகிறார்கள்.

மூன்றாவது தொகுதியில் வர்ணம் ஒலிக்கவிடப்பட்டது. இதில் “இன்னும் என்மனம்” என்ற பதவர்ணம் ஒலிக்க விடப்பட்டது. இதில் கர்நாடக இசையைக் கற்றவர்களில் 4% மானவர்கள் குரலிசையையும், 8% மானவர்கள் வாத்திய இசையையும், 88% மானவர்கள் இருவகையிலும் கேட்க விரும்பினர். மக்களில் 17% மானவர்கள் குரலிசையையும், 56% மானவர்கள் வாத்திய இசையையும், 27% மானவர்கள் இருவகையிலும் கேட்க விரும்பினர். ஆகவே, வர்ணம் எனப்படுகின்ற, சொற்களுக்கு குறைந்த முக்கியத்துவமும், ஸ்வரங்களுக்கு அதிக முக்கியத்துவமும் அளிக்கப்படுகின்ற, உருப்படியை வாத்திய இசையிலோ அல்லது குரலிசையிலோ கேட்பதை சமமாகவே ரசிக்கின்றனர் இசை கற்றவர்கள். ஆனால் பொதுமக்கள், இதையும் வாத்திய இசையில் கேட்கவே அதிகம் விரும்புகின்றனர்.

நான்காவது தொகுதியில் பதம் ஒலிக்கவிடப்பட்டது. இதில் “அலைபாயுதே” என்ற பதம் ஒலிக்கவிடப்பட்டது. இதில் கர்நாடக இசையைக் கற்றவர்களில் 92% மானவர்கள் குரலிசையையும், 4%மானவர்கள் வாத்திய இசையையும், 4% மானவர்கள் இருவகையிலும் கேட்க விரும்பினர். மக்களில் 83% மானவர்கள் குரலிசையையும், 11% மானவர்கள் வாத்திய இசையையும், 6% மானவர்கள் இருவகையிலும் கேட்க விரும்பினர். ஆதலால், உணர்வு பூர்வமான கருத்துக்கள் உடைய பாடல்களை மட்டும் இரு சாராரும் குரலிசையில் கேட்கவே விரும்புகின்றனர், என்பது தெளிவாகிறது.

ஐந்தாவது தொகுதியில் தில்லானா ஒலிக்கவிடப்பட்டது. இதில் தொம்ருத தீம்த என்ற மிஷ்ரசிவரஞ்சனி ராகத் தில்லானா ஒலிக்கவிடப்பட்டது. இதில் கர்நாடக இசையைக் கற்றவர்களில் 94% மானவர்கள் குரலிசையையும், 2% மானவர்கள் வாத்திய இசையையும், 4% மானவர்கள் இருவகையிலும் கேட்க விரும்பினர். மக்களில் 56% மானவர்கள் குரலிசையிலும் 44% மானவர்கள் இருவகையிலும் கேட்க விரும்பினர். ஆகவே , விறுவிறுப்பான, பொருளற்ற ஜதிகளையும், ரசிப்பவர்களை உருக்கும் பொருளுள்ள சில வரிகளையும் கலந்து உருவாக்கப்பட்ட உருப்படி வகையான தில்லானாவையும் இரு சாராரும் குரலிசையில் கேட்க விரும்புகின்றனர்.

இவ் ஐந்து தொகுதிப் பாடல்களின் பின்னர் கர்நாடக சங்கீதத்தின் பிரதான அம்சமாக விளங்கும் "தாயே திரிபுர சுந்தரி" என்ற சண்முகப்பிரியா ராக "ராகம்-தானம்-பல்லவி" ஒலிக்கவிடப்பட்டது. இதில் ராகம், தானம், பல்லவி, நிரவல், கற்பனா ஸ்வரம் என்ற 5 பகுதிகளுக்கும் தனித்தனியே அவர்களது விருப்பங்கள் கேட்டறியப்பட்டன. இதில் இசை கற்றவர்களுக்கு இவற்றின் 5 அம்சங்களும், இரு வகை இசையிலும் சமமாகப் பிடித்திருந்தன. இசை கற்காத மக்களில் குரலிசையில் ராகம் 6% மக்களுக்கும், தானம் 39% மக்களுக்கும், பல்லவி 6% மக்களுக்கும், நிரவல் 0% மக்களுக்கும், கற்பனாஸ்வரம் 50% மக்களுக்கும் பிடித்திருந்தன. வாத்திய இசையில் 67% மக்களுக்கு தானமும், 33% மக்களுக்கு கற்பனாஸ்வரமும் பிடித்திருந்தன. ஸ்வரங்கள் பாடும் அழகையும், தானம் எனப்படுகின்ற பொருளற்ற விறுவிறுப்பான சொற் கட்டுகளாலான குரலிசையையும் ரசிக்கின்ற மக்களால், பொருள் செறிந்த பல்லவிப் பாடல் வரியை மீண்டும் மீண்டும் ராகத்தின் வேறு வேறு பரிமாணங்களில் பாடிய போது ரசிக்க முடியவில்லை.

**முடிவுகள்**

தலாவது தொகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் கீர்த்தனையை குரலிசையிலே கேட்க 19%, வாத்திய இசையிலே கேட்க 58%, இரு வகையான இசையிலும் கேட்க 24% விரும்பியிருந்தனர். இதில் வாத்திய இசையையே அதிகமாகக் கேட்க விரும்பியிருந்தனர். இதிலும் இசையைக் கற்று அனுபவம் இல்லாதவர்களே அதிகம். இவர்களது கருத்துப்படி வாத்தியத்தில் வாசிக்கக் கேட்க சலிப்பு இல்லாமல் கேட்கக் கூடியதாக உள்ளதாகக் கூறுகின்றனர்.

இரண்டாவது தொகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் சௌக்ககால க்ருதியை குரலிசையிலே கேட்க 37%, வாத்திய இசையிலே 56%, இரு வகையான இசையையும் 8% விரும்பியிருந்தனர். இதில் இசை கற்றவர்கள் அதிகமாக சௌக்க காலக் கிருதியை குரலிசையில் கேட்பதற்கே விரும்பியிருந்தனர். இதற்கான காரணத்தைக் கேட்டறிந்த போது, ஒவ்வொரு சங்கதியையும் சொற்களினூடாகக் கேட்கும்போதே கேட்பதற்கு இனிமையாகவும், சௌக்க காலக் கிருதியினுடைய நுட்பங்களைப் புரிந்துகொள்ளக் கூடியதாகவும் உள்ளதாகக் கூறுகின்றனர். இசை கற்காதவர்களுக்கு வாத்திய இசையில் கேட்பதே அதிகமாகப் பிடித்திருந்தது. இதற்கான காரணத்தைக் கேட்டறிந்தபோது ஒவ்வொரு எழுத்துக்களாகப் பாடுவதைப் போலவும் வேகம் குறைவாகவும் காணப்படுவதால் பொறுமையுடன் இருந்து ரசிக்க முடியாமலும் கேட்கமுடியாமலும் உள்ளதாகவும், வாத்தியத்தில் கேட்கும் போது வேகம் குறைந்துள்ளமையை உணரமுடியவில்லை என்றும், கேட்பதற்கு இனிமையாக உள்ளதாகவும் கூறுகின்றனர் (யாழ்ப்பாண மக்கள் 2014).

மூன்றாவது தொகுதியில் வர்ணம் ஒலிக்கவிடப்பட்டது. இதில் குரலிசையில் மட்டும் 11% மானவர்களும், வாத்திய இசையில் 32% மானவர்களும் இருவகை இசையிலும் 58% மானவர்களும் கேட்க விரும்பினர். இதில் இசை கற்றவர்கள் இரு இசையிலும் அதிகமாகக் கேட்க விரும்பினாலும், இசை கற்காதவர்கள் அதிகமாக வாத்தியத்திலே கேட்க விரும்புகின்றனர்.

நான்காவது தொகுதியில் பதம் ஒலிக்கவிடப்பட்டது. இதில் குரலிசையில் மட்டும் 88% மானவர்களும், வாத்திய இசையில் 8% மானவர்களும், இருவகை இசையிலும் 5% மானவர்களும், கேட்க விரும்பினர். இதில் அதிகமானவர்கள் குரலிசையிலே கேட்க விரும்பினர். இதற்கான காரணத்தை அவர்களிடம் கேட்டபோது அதில் உள்ள வார்த்தைகள் விளங்கக் கூடியதாகவும், என்ன விடயம் சொல்ல வருகின்றனர் என்பதைப் புரியக்கூடியதாகவும் உள்ளதால் குரலிசையில் கேட்க அதிகம் விரும்புவதாகக் கூறினார்கள்.

ஐந்தாவது தொகுதியில் தில்லானா ஒலிக்கவிடப்பட்டது. இதில் குரலிசையில் மட்டும் 75% மானவர்களும், வாத்திய இசையில் 1% மானவர்களும், இருவகை இசையிலும் 24% மானவர்களும் கேட்க விரும்பினர். இதில் குரலிசையிலே அதிகமானவர்கள் தில்லானாவைக் கேட்க விரும்பினர். இதற்குரிய காரணத்தை அவர்களிடம் கேட்டபோது மிகவும் விறுவிறுப்பான நடையிலும், சொற்கட்டுக்கள் ரசிக்கக் கூடிய நிலையிலும் இருப்பதால் குரலிசையில் கேட்கவே அதிகமாகப் பிடித்துள்ளதாகக் கூறினர் (மூன்றாம் வருட இசைத்துறை மாணவர்கள் 2014).

ஐந்து தொகுதிப் பாடல்களிலும் முடிவாக ஆராய்ந்ததில் இசை கற்றவர்களுக்கும் இசை

கற்காதவர்களின் ரசிப்புத் தன்மைக்கும் இடையில் பல வேறுபாடுகள் காணப்படுகின்றன. இறுதியாக கர்நாடக சங்கீதத்தின் முக்கிய பகுதியாக விளங்கும் ராகம்-தானம்-பல்லவியில் இசை கற்றவர்களுக்கு அதனுடைய எல்லாப் பகுதிகளும் சமமாகப் பிடித்திருந்தது. ஆனால் கர்நாடக இசையைக் கற்காதவர்களுக்கு குரலிசையிலும், வாத்திய இசையிலும் அதிகமாகத் தானம் மற்றும் கற்பனாஸ்வரமே பிடித்திருந்தது. இதற்குரிய காரணத்தை அவர்களிடம் கேட்டறிந்தபோது தானம், கற்பனாஸ்வரம் என்பன விறுவிறுப்பான நடையில் செல்வதாலும் கேட்பதற்கு சலிப்பு இல்லாமல் இருப்பதாகவும் கூறினர்.

மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முடிவுகளின் படி வாத்திய இசை, குரலிசை என்பன இசை கற்றவர்களுக்குப் பொதுவாகப் பிடித்திருந்தாலும் இசை கற்காதவர்கள் ஒவ்வொரு உருப்படியையும் ஒவ்வொரு விதமாகக் கேட்க விரும்புகின்றனர். பொருள் எளிதாக விளங்கக் கூடிய உருப்படிகள், விறுவிறுப்பான நடையில் விறுவிறுப்பாகப் பாடக்கூடிய உருப்படிகள் மற்றும் பொருளற்ற ஸ்வரங்கள் ஜதிகள் என்பவற்றைக் குரலிசையில் கேட்பதற்கே அதிகமாக விரும்புகின்றனர். கர்நாடக இசையின் நுட்பங்கள் புலப்படக்கூடிய உருப்படிகளை அவர்கள் அதிகமாக விரும்புவதில்லை.

மக்கள் பொருள் இருந்தும் புரிவதற்குக் கடினமான பாடல்களை வாத்திய இசையிலேயே ரசிக்க விரும்புகின்றனர். ஆனால் பொருளற்ற விறுவிறுப்பான சொற்கட்டுகளையோ, ஸ்வரங்களையோ குரலிசையில் கேட்க விரும்புகின்றனர். மக்களின் தாய் மொழியினாலான பாடல்களில், பொருள் இருந்தும், புரியக் கடினமான நிலையானது, அவர்களது தன்மானத்தைப் பாதிக்கக்கூடும். இசை கற்காதவர்கள், பொதுவாக கர்நாடக சங்கீதத்தின் உயிர்நாடியான இராக ஆலாபனையை விரும்பவில்லை. மாறாக, விறுவிறுப்பான மற்றும் பொருள் விளங்கி அனுபவிக்கக் கூடிய உருப்படிகளே மக்களுக்குப் பிடித்துள்ளதை இவ் ஆய்வினூடாக கண்டுகொள்ளமுடிந்தது.

**ஆய்வின் பரிந்துரைகள்**

இசைக் கச்சேரிகளிலும் அவர்கள் இதே நிலையில்தான் இருக்கமுடியும். கச்சேரிகள் மக்களின் மனங்களை வெற்றி கொள்ளும் வகையில் அமைக்கப்படல் வேண்டும். கர்நாடக சங்கீதம் கற்றவர்கள்தான் அதிகமாக கச்சேரி கேட்க வருகின்றனர் என்றால் அவ்விடத்தில் கர்நாடக சங்கீதத்தின் நுட்பங்களை விளக்கக்கூடிய உருப்படிகளைப் பாடலாம். ஆனால் அவ்விடத்தில் இசை கற்காதவர்கள் தான் அதிகமாக இருக்கின்றனர் என்றால் அங்கு எல்லோர் மனதையும் கவரக்கூடிய உருப்படிகளைத் தெரிவு செய்தல் வேண்டும். வாத்திய இசையோ குரலிசையோ எவ்வகை இசையானாலும் உருப்படிகளிலும் மக்களின் மனங்களிலுமே அவ்விசையின் வெற்றி தங்கியுள்ளது.

**ஆய்வுக்குதவியமை**

1. பக்கிரிசாமிபாரதி, ஏ 2009, இந்திய இசைக் கருவூலம், குசேலர் பதிப்பகம், சென்னை, இந்தியா.
2. மூன்றாம் வருட இசைத்துறை மாணவர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், இலங்கை (கேள்வி விபரக்கொத்து, வைகாசி 06, 2014)
3. யாழ்ப்பாண மக்கள், (குழு கலந்துரையாடல், வைகாசி 04, 2014)

**பின்னிணைப்பு**
**வினாக்கொத்து**

1. 1ம் தொகுதியில் பிடித்தது (வாத்திய இசை /குரல் இசை /இரு இசைகளும்) காரணம்....................................
2. 2ம் தொகுதியில் பிடித்தது (வாத்திய இசை /குரல்இசை /இரு இசைகளும்) காரணம்....................................
3. 3ம் தொகுதியில் பிடித்தது (வாத்திய இசை/ குரல் இசை /இரு இசைகளும்) காரணம்...................................
4. 4ம் தொகுதியில் பிடித்தது (வாத்திய இசை/ குரல் இசை/ இரு இசைகளும்) காரணம்....................................
5. 5ம் தொகுதியில் பிடித்தது (வாத்திய இசை/ குரல் இசை/ இரு இசைகளும்) காரணம்....................................
6. பொதுவாகவே நீங்கள் குரலிசையையா வாத்திய இசையையா விரும்புகிறீர்கள்? (குரலிசை/ வாத்திய இசை/ இரு இசைகளும்)

Table 1- Sowkka kaala kruthi

| category | vocal | instrument | Vocal & instrument |
|---|---|---|---|
| BFA(music) Students | 73% | 12% | 15% |
| unknown music people | _ | 100% | _ |

Table-2 Varnam

| category | Vocal | Instrument | Vocal & Instrument |
|---|---|---|---|
| BFA(music) Students | 4% | 8% | 88% |
| unknown music people | 17% | 56% | 28% |

Table 3- Patham

| category | Vocal | Instrument | Vocal & instrument |
|---|---|---|---|
| BFA (Music) students | 94% | 2% | 4% |
| Unknown music people | 56% | _ | 44% |

Table 4- Thillaanaa

| Category | vocal | | | | |
|---|---|---|---|---|---|
| Pallavi | ragam | taanam | pallavi | Niraval | katpanaswaram |
| music students | 100% | 100% | 100% | 100% | 100% |
| people | 5.55 | 38.88 | 5.55 | – | 50 |

Table 5- Pallavi - Vocal

| category | Vocal | Instrument | Vocal & instrument |
|---|---|---|---|
| BFA (Music) students | 92% | 4% | 4% |
| Unknown music people | 83% | 11% | 6% |

Table-6- Pallavi – Instrumental

| Category | instrument | | | | |
|---|---|---|---|---|---|
| Pallavi | ragam | taanam | pallavi | Niraval | katpanaswaram |
| music students | 100% | 100% | 100% | 100% | 100% |
| people | – | 66.66 | – | – | 33.33 |